2026 ஏப்ரல் மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

C.C.No. 3/2025

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 – செல்வகுமாரி |
| தகப்பனார் பெயர்: | குணசேகரன் |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு, மீனாட்சியம்மன் கோவில், மதுரை |
| வயது : | 47 |

02.04.2026

(எதிரி Video Conference –ல் PT Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் மதுரை மாவட்டம், மீனாட்சியம்மன் கோவில், குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல்நிலை விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.கருப்பையா அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் படுத்தப்படுக்கையாக இருப்பதால் அவர் நீதிமன்றம் வர இயலாத சூழ்நிலையில் வழக்கின் மேல்விசாரணை அதிகாரியான நானே, அவரின் விசாரணை குறித்த சாட்சியத்தையும், அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சியம் என்பதால் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 18.09.2025ம் தேதி கடமலைக்குண்டு வட்ட காவல் ஆய்வாளராக

பணியாற்றிய போது, எனக்கு கீழ் பணிபுரிந்த வருஷநாடு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.கருப்பையா என்பவர் வருஷநாடு காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது 18.09.2025 ம் தேதி காலை 8.10 மணிக்கு புகார்தாரர் மலைச்சாமி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று வருஷநாடு காவல்நிலைய குற்ற எண்.102/2025 பிரிவுகள் 232(1), 296 பி, 351(1) BNS –ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார்.

2. அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கை சார்பு ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடத்திற்கு சென்று காலை 9.10 மணிக்கு சம்பவ இட சாட்சிகளான ஜெயப்பாண்டியன், அசோக் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகவும், பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

3. சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சியான ராமு, சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான சுமதி மற்றும் புகார்தாரர் மலைச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரியை தேடிவந்த நிலையில் 18.09.2025 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் வருஷநாடு, பெருமாள் கோவில் பின்புறம் நின்றுக்கொண்டிருந்த வழக்கின் எதிரியான அய்யனார் என்பவரை காரணம் கூறி கைது செய்தும், கைது விபரத்தினை உறவினர்களுக்கு தகவல் கொடுத்தும், நிலையம் கொண்டுவந்து திரேத பரிசோதனை செய்து, நிலைய பாராவில் வைத்து, பின்னர் தக்க வழிக்காவல் மூலம் ஆண்டிபட்டி, நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர் செய்யப்பட்டு, பின்னர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார்.

4. பின்னர் சார்பு ஆய்வாளர் வழக்கின் மேல்விசாரணைக்காக வழக்கு கோப்புகளை எனது பார்வைக்கு வைத்ததை 09.10.2025 ம் தேதி எனது

விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு சென்று, சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகள் சார்பு ஆய்வாளரிடம் சொன்னதுபோலவே, என்னிடம் சொன்னதால் வாக்குமூலம் தனியாக பதிவு செய்யாமல், புகார்தாரர் மலைச்சாமியை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.கருப்பையா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் விசாரணையை முடித்துக்கொண்டு, 09.10.2025 ம் தேதி எதிரி அய்யனார் மீது பிரிவுகள் 232(1), 296 பி, 351(2) BNS – ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

5. வழக்கின் எதிரி அய்யனார் என்பவர் மீது வருஷநாடு காவல்நிலையத்தில் கடந்த 2024 ம் வருடம் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.131/2024, தேனி, மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் S.C.No.50/2025, பிரிவு 103(1), 296(b), 351(1) BNS என்ற வழக்கில் தேனி, மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் எதிரிக்கு ஆயுட்தண்டனை வழங்கி அவர் தண்டனை கைதியாக மதுரை மத்திய சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார். மேற்படி S.C.No.50/2025 வழக்கு நிலுவையில் இருந்தபோது, பிணையில் வந்த எதிரி அய்யனார் புகார்தாரர் மலைச்சாமி என்பவரை அவருக்கு சாதகமாக நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்ல வேண்டும் என்று கூறி கொலை மிரட்டல் மற்றும் அசிங்கமாக பேசியதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது. எனவே எதிரி இதுபோன்ற குற்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாலும், எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

6. இந்த வழக்கில் சம்பவம் நடந்த தேதி என்ன என்றால் 17.09.2025 ம் தேதி 18.00 மணியாகும். அன்றைய தினம் புகார்தாரர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திற்கும், சம்பவ

இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் தெற்கே சுமார் 8 கி.மீ தூரம் இருக்கும். இவ்வழக்கு சம்பவ இடத்திற்கு செல்ல வேண்டும் என்றால் வருஷநாடு பேருந்து நிலையத்திலிருந்து நடந்தோ, இருச்சக்கர வாகனத்தில் தான் செல்ல முடியும் என்றால் சரிதான், பேருந்து போக்குவரத்து உண்டு. பேருந்து போக்குவரத்து 1 மணிநேரம் அல்லது 2 மணிநேரத்திற்கு ஒருமுறை உண்டு என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரியானவர் சம்பவ தேதியில் நத்தம் காவல்நிலையத்தில் Condition கையொப்பம் செய்துக்கொண்டிருந்தார் என்ற விபரத்தை இவ்வழக்கு விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

7. இவ்வழக்கின் எதிரி சம்பவ தேதியில் காலை 10.30 மணிக்கு நத்தம் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தாரா என்ற விபரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. சார்பு ஆய்வாளரை நான் விசாரித்தபோது 17.09.2025ம் தேதி நத்தம் காவல்நிலையத்தில் எதிரி Condition கையொப்பம் செய்ததாக எனது விசாரணையில் கூறினாரா என்றால் இல்லை. சீலமுத்தையாபுரத்திலிருந்து நத்தம் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 2 1/2 லிருந்து 3 மணிநேரம் ஆகும். நான் சொல்வதுபோல் 2 1/2 மணிநேரம் ஆகாது என்றாலும், குறைந்த பட்சம் 4 முதல் 5 மணிநேரம் ஆகும் என்றால் அது வாகனத்தை பொறுத்து மாறுபடும். இவ்வழக்கின் சாட்சிகளின் விசாரணையின்போது BNSS சட்டத்தின்படி வீடியோ பதிவு எடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவ இடத்தை நானோ அல்லது சார்பு ஆய்வாளரோ புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

8. இவ்வழக்கின் எதிரியை 18.09.2025ம் தேதி மதியம் 12.00 மணிக்கு கைது செய்ததாக நான் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 18.09.2025ம் தேதி எதிரி நத்தம் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தாரா என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் எதிரி கையொப்பம் செய்யவில்லை. அவ்வாறு

கையொப்பம் செய்யவில்லை என்பதை காட்ட நத்தம் காவல்நிலையத்தில் இருந்து நான் ஆவணம் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் சாட்சிகள் யாரையும் சட்டப்படி விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் அ.சா.1 எதிரியின் சகோதரர் ஆவார் என்றாலும், அவர்களுக்குள் சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.

9. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் பின்னிட்டு கொடுத்த புகாரை பெற்று நானும், சார்பு ஆய்வாளரும் ஒரு பொய்யான வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்துள்ளோம் என்றாலும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி நத்தம் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றாலும், அதை மறைத்து இவ்வழக்கில் எதிரி மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.04.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.02 16:41:20 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.04.2026